செய்தியைக் கேட்பதோடு, சென்னை போன்ற பெரு நகரங்களிலே, குறிப்பாக சென்னையிலே, சென்னையைச் சுற்றியுள்ள விவசாயிகளுடைய நலன் கருதி மெகா உழவர் சந்தை அமைக்கிற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா? அது குறித்து அரசு என்ன பதில் அளிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே மெகா உழவர் சந்தை அமைக்க கால்கோள் விழா செய்திருக்கின்றார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

விழிப்புணர்வு முகாம்

***62474—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து கிராமப் பகுதிகளில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து கிராமப் பகுதிகளுக்கென தனியே விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்துவது குறித்த பொருள் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.*

2010 நவம்பர் 9]

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்பது இன்றைக்கு கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய ஏழையெளிய, பாமர மக்கள், கல்வி அறிவில்லாத மக்கள் எந்த ஒரு தகவலையும் தெரிந்துகொள்வதற்கான ஒரு உன்னதமான சட்டம். ஆனால், இந்தச் சட்டத்தின்மூலமாக தகவல்களை எப்படி நாம் தெரிந்துகொள்ள முடியும் என்கின்ற ஒரு விழிப்புணர்வு இன்றைக்கு கிராமப்புற மக்களுக்கும் குறிப்பாக மாணவர்கள் மத்தியிலேகூட இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அரசு இது சம்பந்தமாக ஆங்காங்கே, ஒன்றியங்கள் வாரியாகவும் அல்லது தொகுதிகள் வாரியாகவும், இந்தச் சட்டம் சம்பந்தமான விளக்கத்தை முகாம்கள் மூலமாக தெரிவித்தால் அடித்தட்டு மக்கள் முழுமையாகப் பயன்பெறக்கூடிய அளவிற்கு இந்தச் சட்டம் பயன்படும் என்பதைத் தெரிவித்து இதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தச் சட்டம் ஒவ்வொரு குடிமகனும் தான் வரி செலுத்துகிற அரசாங்கம் எப்படி நடைபெறுகிறது என்பதை அறிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் கொண்டுவரப்பட்ட ஒன்று. அரசாங்கத்தில் என்ன நடைபெறுகிறது என்பது பல்வேறு விஷயங்களில் வெளிப்படையாக இருக்க வேண்டும் என்பதை ஒத்துக்கொண்டு முதன்முதலாக இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை 1997–லேயே கொண்டுவந்தவர் இன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகுதான் குஜராத் மற்றும் பிற மாநிலங்கள் தமிழ்நாட்டைப் பார்த்து அப்படிப்பட்ட சட்டத்தை உருவாக்கின. ஒவ்வொரு மாநிலமும் தனித்தனியே அப்படி உருவாக்குவதைவிட மத்திய அரசுக்கு அதிலே அக்கறை இருந்த காரணத்தால் 2000 ஆம் ஆண்டு அவர்களே ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தச் சட்டம் வந்த காரணத்தால் தமிழக அரசு கொண்டுவந்த சட்டம் செல்லுபடியாகாமல் போகும். எனவே, மத்திய அரசு கொண்டுவந்திருக்கிற தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன்

அடிப்படையில்தான் செயலாக்கத்தில் இருக்கின்றது. The main aim of the Act is to promote transparency and accountability and secure the citizens the right to access the information from the public authority. இதுதான் அவர்களுடைய முக்கியக் குறிக்கோள். அது மக்களுக்குத் தெரிய வேண்டும், அதை எப்படிப் பெறவேண்டும், அதனுடைய முக்கியத்துவம் என்ன என்று அறிவதற்கு 2008–2009 ஆம் ஆண்டு Part II scheme திட்டத்தின்கீழ் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அதிலிருந்து சென்னை தொலைக்காட்சி தூர்தர்ஷன்மூலம் நேரடி ஒளிபரப்பு நிகழச்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், பள்ளிகள், கல்லூரிகள் மாணவர்களிடையே பேச்சுப்போட்டி நடத்தி அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறோம். T.V., Radio மூலம் இந்தத் தகவல் பெறும் ஆணையாளர் அவர்களை பொதுமக்கள் கேள்வி கேட்க அவர் பதில் சொல்கிற அந்த நிகழ்வுக்கும் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இவ்வளவுக்கும் மேலாக ‘தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 வழிகாட்டிக் கையேடு’ என்று ஒரு புத்தகத்தையும் அரசு வெளியிட்டிருக்கிறது. சின்னச் சின்ன bit notice-கள் அடித்து பொதுமக்கள் அதிகமாகக் கூடுகிற இடங்களில் விநியோகம் செய்திருக்கிறோம். ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கு முன்பாகவும் விளம்பரங்கள், bit notice இவற்றை ஒட்டி மக்கள் அறியும் வண்ணம் செய்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலேதான் இப்போது கிராமத்திலே இருக்கிறவர்கள்கூட இந்தத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்மூலம் சில செய்திகளைத் தெரிந்துகொள்ள முடிகிறது. இன்னும் சொல்லப்போனால், தகவல் கேட்பதற்கு 50 ரூபாய் என்ற ஒரு கட்டணத்தை சென்ற ஆட்சிக்காலத்தில் நிர்ணயித்திருந்தார்கள். ஆனால், கலைஞர் அவர்கள் அதை 10 ரூபாயாக மாற்றி யார் வேண்டுமானாலும் கேள்வி கேட்கலாம் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்மூலம் பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டியவற்றைத் தெரிந்துகொள்வதற்கு எல்லாவிதமான வழிகளையும் அரசு செய்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய இந்த பதிலின்படி

2010 நவம்பர் 9]

இன்றைக்கு வேலைகள் ஓரளவு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. என்பது உண்மையாக இருந்தாலும்கூட, இன்னும் முழுமையாக மக்களுக்கு இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் என்பது சென்றடையவில்லை. அப்படியே சென்றடைந்து ஒரு சிலர் இந்தத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்மூலமாக சில அதிகாரிகளிடம் சில உண்மைகளைக் கேட்கின்றபோது உரிய காலத்தில் உரிய உண்மையைக் கொடுக்க மறுக்கிறார்கள். காலம் தாழ்த்தி வருகிறார்கள். அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–55

இந்தச் சட்டத்தினுடைய முழு நோக்கமே அனைத்து நிகழ்வுகளும் வெளிப்படையாக மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதுதான். அதன் அடிப்படையில், இந்தச் சட்டமன்றத்தினுடைய நிகழ்ச்சிகளைக்கூட நேரடியாக தொலைக்காட்சிமூலமாக அனைத்து மக்களும் பார்ப்பதற்கும், தெரிந்துகொள்வதற்கும் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், கல்வியிலும், இதை பாடத் திட்டத்தில் ஒரு பிரிவாகக் கொண்டுவந்தால், இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் முழுமையாக வெற்றிபெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் ஒருவர் ஒரு தகவலைத் தெரிந்துகொள்ள விரும்பினால், 30 நாட்களுக்குள் அவருக்கு அந்தத் தகவலைத் தர வேண்டும். அப்படித் தராவிட்டால், அவர் மேற்கொண்டு appeal செய்யலாம். ஒவ்வொரு அரசாங்க அலுவலகத்திலும் Assistant Public Information Officer, அவருக்கு மேல் Public Information Officer, இந்த இரண்டிலும் பலன் கிடைக்காவிட்டால் Appellate Authority, அதற்கு மேற்கொண்டு மாநிலத்தினுடைய தகவல் அறியும் உரிமை ஆணையத்திற்குப் போகலாம் என்று இருக்கிறது. அப்படி

[2010 நவம்பர் 9

குறிப்பிட்ட நாட்களுக்குள் நியாயமாகத் தெரிவிக்க வேண்டிய செய்திகளைத் தெரிவிக்காதவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கிட்டத்தட்ட ரூ.25,000/– வரையில்கூட அவர்களுக்கு அபராதம் போட்டிருக்கிறார்கள். பல அதிகாரிகள் அதைக் கட்டியிருக்கிறார்கள். சில விஷயங்களை அரசு வெளியிட முடியாது. எந்தெந்தத் தகவல்களுக்கு இந்தத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பொருந்தாது என்று அந்தச் சட்டத்திலேயே விளக்கம் அளித்திருக்கிறார்கள். அதையும் அந்த அதிகாரிகள் தெரிவித்துவிடுகிறார்கள். இந்தச் செய்திகளை அரசு வெளியிடக்கூடாது, இது பாதுகாப்புக் கருதியது, இது investigation–ல் இருக்கக்கூடியது என்று அதற்கும் பதில் தெரிவிக்கிறார்கள். ஆகையினால், தெரிவிக்க வேண்டிய கருத்தை அரசு நிச்சயமாகத் தெரிவிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினுடைய தாக்கம், வீச்சு குறித்தும் சாமானிய மக்களுக்கு எவ்வாறு தகவல்கள் தரப்படுகின்றன என்பதைப்பற்றியும் விளக்கமாகச் சொன்னார்கள். இந்தத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற இடத்திலே இருக்கின்ற அரசு அதிகாரிகளுக்கு, அந்தச் சட்டத்தினுடைய முழுமையான தாத்பரியங்கள் விளங்கவில்லையென்று நம்முடைய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஆணையாளர்களே சில தீர்ப்புகளிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, மாநில அரசு சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு சிறப்பான பயிற்சி கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடுகளைச் செய்திருக்கிறதா? இதற்கென தனியே அதிகாரிகளை நியமிப்பதற்கு அரசு முன்வருமா? இப்பொழுது அரசு அதிகாரிகள் யாராவது ஒருவரை, we just designate them as Information Officers and Assistant Information Officers என்றில்லாமல் முழு நேரமாகப் பணியாற்றுவதற்கு, பயிற்சி அளிக்கப்பட்ட அதிகாரிகளை நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மேலும், இந்தச் சட்டத்திற்கென்று மத்திய அரசு சில குறியீடுகளை நிர்ணயித்திருக்கிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினுடைய ஆணையம் எவ்வாறு செயல்பட வேண்டுமென்று

2010 நவம்பர் 9]

தெரிவித்து அதற்கான சிறப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன. கடந்த ஆண்டு அந்த விருதுகளை வழங்குவதற்கான தகுதியை தமிழ்நாட்டினுடைய தகவல் ஆணையம் பெறவில்லை என்ற செய்தியும் வந்திருக்கிறது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன கருத்துத் தெரிவிக்கிறார்கள் என்று அறிய ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில், கடந்த ஆண்டு எத்தனை கேட்புகள் வந்திருக்கின்றன; எத்தனை கேட்புகளுக்கு அதிகாரிகள் தகவல்களைத் தந்திருக்கிறார்கள்; மாநில தகவல் ஆணையத்திற்கு எத்தனை மேல் முறையீடுகள் வந்திருக்கின்றன; அவற்றில் எத்தனை நிறைவேற்றப்பட்டு அவற்றுக்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்திலே அதிகாரிகளுக்குப் பயிற்சி கொடுக்கிறார்கள்.

இரண்டாவது கேள்வியாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எத்தனை கேட்புகள் வந்திருக்கின்றன, எத்தனை கேட்புகளுக்கு விளக்கம் அளித்தார்கள் என்று விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது குறித்து தனிக் கேள்வி கேட்டால் அது குறித்த புள்ளிவிவரங்களை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

4—

தொழில்நுட்பக் கல்லூரி

***107309—திரு. பெ. மோகன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—